**S.C.No.125/2018**

**7.6.2023.** **1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**அ.சா.1** **திரு. செல்வராஜ்.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**என் வீட்டில் இருந்து வரவேண்டும் என்றால் நல்லூர் கூட்ரோடு, தெள்ளார் கூட்ரோடு வந்து வரவேண்டும் என்றால் கொண்டையாங்குப்பத்தில் இருந்து அருங்குணம் வந்து சம்பவ இடத்திற்கு வந்துவிடலாம். ஒன்றரை கிலோமீட்டர் தூரம் தான். 1ம் எதிரி கிருஷ்ணன் சென்னையில் ஒரு மருந்து கம்பெனியில் மருந்து விற்பனை பிரதிநிதியாக அங்கேயே தங்கி வேலை பார்த்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.**

**சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கிருஷ்ணன் பாகத்தில் நடந்தது என்றால் என்னுடைய பாகத்தில் நடந்தது. என் பாகத்திற்கு செட்டில்மெண்ட் மூலம் வந்ததா என்றால் வந்தது. என் பாகம் என்பதற்கு ஆவணமோ, அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கிருஷ்ணன் பெயரில் ஆவணமும் அனுபவமும் உள்ளது என்பதால் தான் கிருஷ்ணனை இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. என் பாகத்தில் தான் உள்ளது.**

**நாங்கள் தான் எதிரிகளை வெளியில் இருந்து ஆட்களை வரவழைத்து தாக்கினோம் என்றால் சரியல்ல. என் பெயரிலும் மற்ற சாட்சிகளின் பெயரிலும் வந்தவாசி காவல்நிலையத்தில் குற்ற எண்.205/2011 என்ற வழக்கு உள்ளது என்றால் அது சிவில் வழக்கினால் எழுந்த வழக்காகும். என்னை குற்ற வழக்கில் கைது செய்தார்களா என்றால் செய்தார்கள். போலிசார்**

விசாரித்தபோது எதிரிகளுக்கு எப்படி காயம்பட்டது என்று சொன்னேனா என்றால் அவர்களுக்கு காயமே படவில்லை.

என் மாமனார் கண்ணனை வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது நினைவு இருந்ததா என்றால் நினைவு இல்லை. செங்கல்பட்டுக்கு அழைத்துச் சென்றபோதும் நினைவு இருந்ததா என்றால் நினைவு இல்லை. சென்னைக்கு அழைத்துச்சென்ற போது நினைவு இருந்ததா என்றால் நினைவு இல்லை. என் மாமனாருக்கு அறுவைசிகிச்சை செய்த பிறகு நினைவு இருந்ததா என்றால் அப்போதும் நினைவு இல்லை. சாகும்வரை நினைவு இல்லை.

வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்த நான், குமாரி, லட்சுமிதேவி ஆகியோர் தலைமறைவாகிவிட்டோம் என்றால் இல்லை. வந்தவாசி அரசு மருத்துவமனையில் தான் எங்களை செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். நாங்கள் தலைமறைவானதற்கு காரணமே எதிரிகளை தாக்கியது தான் என்றாலும், அதனால் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு சென்று படுத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

செங்கல்பட்டு மருத்துவமனையில் வந்தவாசியில் எடுத்த சிகிச்சை பற்றி சொல்லியுள்ளோமா என்றால் சொல்லியுள்ளோம். வந்தவாசி மருத்துவமனையில் தான் அனுப்பி வைத்தார்கள். என்னை கைது செய்தபிறகு தான் என் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவானது என்றால் சரியல்ல.

எதிரிகள் மாரிமுத்து, தனலட்சுமி, கன்னியம்மாள், ராதா ஆகியோர்களை நாங்கள் தான் கத்தி, கம்பி மற்றும் தடியினால் தாக்கினோம் என்றால் சரியல்ல.

அவ்வாறு தாக்கியதில் தான் என் மாமனாரும் தாக்கப்பட்டார் என்றாலும், எனக்கும், குமாரி, லட்சுமிதேவிக்கும் காயமானது என்றால் சரியல்ல. அதனால் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்போது எதிரிகளுக்கு காயமானது குறித்து சொல்லவில்லை என்றால் பொய்யான வாசகம்.

நிலம் சம்பந்தமாக தடையுத்திரவு கோரி அசல் வழக்கு எண்.76/2011 என்ற வழக்கை வந்தவாசி உரிமையியல் நீதிமன்றத்தில் எதிரிகள் மீது போடப்பட்டுள்ளது என்றால் சரி தான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தாக்கல் செய்த பிராதின் நகலா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது. சிவில் வழக்கில் இந்த வழக்கில் காட்டப்பட்ட நில தகராறு சொத்துக்கள் காட்டப்படவில்லை என்றால் பொய்யான வார்த்தை.

நாங்கள் கொடுத்த புகாரில் எதிரிகள் முன்ஜாமீன் போட்டார்களா என்றால் போடவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் எதிரிகள் தரப்பில் போடப்பட்ட முன்ஜாமீன் மனுவிற்கு நாங்கள் மறுப்பு மனு போட்டோம் என்றால் நாங்கள் மறுப்பு மனு போடவில்லை.

எதிரிகளை என் மாமனார் இறந்தவுடன் கைது செய்தவுடன் தான் நான் மறுப்பு மனு போட்டேன். நான் முன்ஜாமீன் மனுவில் மறுப்பு மனு போடும்போது என் நிலத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது எதிரிகள் வந்து அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் பொய்யான வாசகம்.

புகார் வாக்குமூலத்திலும் முதல் விசாரணை வாக்குமூலத்திலும் தமிழ்மணி சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தமிழ்மணியும், மாமனாரும் தான் வந்தார்கள். எதிரிகள் யாரும் எங்களை தாக்கவில்லை என்றாலும், அதில் கண்ணனுக்கும் காயம்

ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்கு எதிரான குற்ற வழக்கில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேனா என்றால் அந்த வழக்கை தள்ளுபடி செய்து தான் இந்த வழக்கை நடத்தி வருகிறார்கள்.

28.11.2011 அன்று நாங்கள் எதிரி ஏழுமலையை ஆயுதங்களால் அடித்து தாக்கியது சம்பந்தமாக சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் ஏழுமலை சிகிச்சை பெற்று வந்தார் என்றால் பொய்யான வாசகம். இதுசம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டு போலிசார் எங்களை விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை.

இந்த வழக்கு சம்பவம் நடப்பதற்கு முன்பு 28.4.2011 அன்று நடந்த சம்பவத்திற்கு ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் பைப் புதைப்பதற்காக நடந்தது ஒரு சம்பவம். அதில் பஞ்சாயத்து நடந்து தீராததால் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு பைப் புதைத்தோம். அதற்கு தான் அந்த சிவில் வழக்கா என்றால் அது தனி வழக்கு.

8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.